REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 9உ வியாழன் (23—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 10உ வெள்ளி (24—6—55) [இதழ் 8

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த!

மசோதா தயாராகிவிட்டது

வரும் ஜூலை 25-ந் தேதியன்று இந்திய மக்கள் சபை கூடும்பொழுது, குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தயாராகி உள்ள மசோதா கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

வட நாட்டை வளப்படுத்த புதிய ஏற்பாடு

பக்ரா—நங்கல் பகுதியில் உரத் தொழிற்சாலை

பிறநாட்டுத் தொழில் நிலையங்கள் திட்டம் தந்துள்ளன

ஆண்டுக்கு 2,00,000 டன் செயற்கை உரம் உற்பத்தி செய்யப்படும்

பக்ரா—நங்கல் பகுதியில் ஒரு பெரிய செயற்கை உரத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் டன் அம்மோனியம் நைட்ரேட் உற்பத்தி செய்யக்கூடிய அளவில், அத்தொழிற்சாலை அமைக்கப்படும்.

அதில் உள்ள நைட்ரஜன் பங்கைக்கொண்டு கணக்கிட்டால், சிந்திரி உரத் தொழிற்சாலையின் உற்பத்தி சக்தியைப் போன்று, 70,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் புதிய தொழிற்சாலை அமையும் எனத் தெரியவருகிறது.

புதிய உரத் தொழிற்சாலைக்குரிய முடிந்த குறிப்புகளை புகழ் வாய்ந்த வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள், இந்தியப் பேரரசிற்கு அனுப்பியுள்ளன.

அக்குறிப்புகளை நுணுகி ஆராய்ந்து முடிவுகட்ட இந்தியப் பேரரசின் முதன்மை தொழில் துறை ஆலோசகரான டாக்டர் ஏ. நாகராஜராவ், நிபுணர் கூட்டத்துடன் தீவிரமாக ஆலோசித்துவருகிறார்.

அந்த ஆய்வுக் குழுவில், சிந்திரி உரத் தொழிற்சாலையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த கே. சி. சர்மாவும் உறுப்பினராக உள்ளார். புதிய தொழில் நிறுவனத்தின் துணை ஆணையாளராகவும், அவர் இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

★

பொதுச்செயலாளர்

வேலூர் நகராட்சி மன்றம் வரவேற்பு

26-6-55 காலை 9-30 மணிக்கு, வேலூர் நகராட்சி அலுவலகத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நல் வரவேற்பு உரை வாசித்தளிக்கப்படும்.

★

சேவூர் (வ.ஆ.) ஊராட்சி மன்றத்தில்

25—6—55 மாலை 4 மணிக்கு, சேவூர் (வ.ஆ.) ஊராட்சி மன்றத்தில், தி.மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

பிரசித்திபெற்ற சித்த முறை புறக்கணிக்கப்பட்டதேன்?

தென்னாட்டு மருத்துவ முறை என்பதாலா?

"ஆயுர்வேத யுனானி, ஹோமியோபதி, மற்றும் இயற்கை சிகிச்சை ஆகிய மருத்துவ முறைகளின் அபிவிருத்திக்கு—மருந்து ஆராய்ச்சி உட்பட, இந்திய சர்க்கார் ஒன்றேகால் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றனர் என்ற அறிவிப்பு, தென்னாட்டில் பிரசித்தி பெற்ற மருத்துவ முறையான சித்த முறையை முழுவதும் அலட்சியப்படுத்திவிட்டுள்ளது.

"தென்னாட்டில் நல்ல இடம் பெற்றிருக்கும் தொன்மை வாய்ந்த இந்த முறை மருத்துவ வளர்ச்சிக்கு ஆதரவு தர இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தவறக்கூடாது என்று கருதுகிறேன்,"

என்று, ஈரோடு டி. சீனிவாச முதலியார் என்பவர், சென்னை 'இந்து' இதழ் ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். கடிதம், 'இந்து', சென்னை 22—6—55-ந் தேதிய இதழில் வெளியாகியுள்ளது.

30,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்!

30 தொழிற் சங்கத் தலைவர்கள் கைது

கல்கத்தா, ஜூன் 22—

டார்ஜிலிங்கில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் 80-ல், சுமார் 60-க்கும் அதிகமானவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகப் பெரியதோர் வேலை நிறுத்தத்தைத் துவங்கியுள்ளனர்.

கம்யூனிஸ்டுகள், மற்றும் கூர்காலீக் தலைமையில் உள்ள தேயிலைத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டுக் குழுவுக்கு, சுமார் 30,000 - தொழிலாளர் செவி சாய்த்து வேலை நிறுத்தத்தில் குதித்திருக்கின்றனர்.

எஞ்சியுள்ள சுமார் 30 ஆயிரம் தொழிலாளர்களும், வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதைப் பொறுத்துக் கலந்து கொள்வராம்.

தங்கள் வேலை, கூலி நிர்ணயம் போன்றவற்றிற்காக 11 - அம்சத் திட்டமொன்றை அமுல் செய்வதைக் கோரிக்கையாக வைத்து வேலை நிறுத்தம் நடைபெறுகிறதாம்.

நேற்று முன்தினமே, வேலை நிறுத்த அறிவிப்பு தரப்பட்டதும், சுமார் 80 தொழிற் சங்கத் தலைவர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தினால், சுமார் 20 தேயிலைத் தோட்டங்களில் முழுவதாகவும், சிலவற்றில் பெரும் பகுதியும் வேலை நிலை நின்றுவிட்டதாகத் தெரிய வருகிறது.

இத்தாலி அமைச்சரவை பதவி நீக்கம்

கடந்த 16 தினங்களாக இத்தாலியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்த கூட்டு மந்திரிசபை இன்று பதவி நீக்கம் செய்துகொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மந்திரி சபையின் முக்கிய கட்சியான 'கிறிஸ்டியன் டெமாகிரடிக்' கட்சியினிடையே ஏற்பட்ட பிளவுகளே இந்தப் பதவி நீக்கத்திற்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

★

மேலும் இரண்டு!

எர்ணுகுளம், ஜூன் 22—

சிந்திரி இரசாயன உர உற்பத்திச்சாலையைப் போல் மேலும் இரண்டு அல்லது மூன்று தொழிற்சாலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மத்திய சர்க்கார் உணவு மந்திரி அஜீத் பிரசாத் கூறியிருக்கிறார்.

வைகை நீர் தேக்க திட்டம்

சென்னை, ஜூன் 21—

வைகை நீர்த் தேக்க திட்டத்தின் வேலையை ஜூன் 25-ந் தேதியன்று முதன் மந்திரி காமராசர் துவக்கிவைப்பார் எனத் தெரிகிறது.

நெய்வேலி திட்டம் உருப்பெறுமா?

விஜயவாடாவிற்காவது அப்பேறு கிட்டுமா?

இந்தியப் பேரரசு என்ன செய்யப்போகிறது?

புதுடில்லி, ஜூன் 22—

ஒரு செயற்கை உரத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவதற்கு ஏற்ற இடமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரி பகுதி இருக்கிறது. இந்த உண்மையை, உர விசாரணைக் குழு, இந்தியப் பேரரசிடம் ஒப்படைத்துள்ள தனது அறிக்கையில் கூறியுள்ளது.

அக்குழுவின் அறிக்கை இந்தியப் பேரரசின் பரிசோதனையில் இருந்து வருகிறது என நம்பப்படுகிறது.

46,000 டன் 'யூரா' என்ற உயர்ந்தரக உரத்தையும், 2 லட்சம் டன் இரட்டை உப்பு உரத்தையும் உற்பத்திச் செய்யக்கூடிய அமைப்புள்ள தொழிற்சாலையை நிர்மாணிக்க முடியும் என, அக்குழு, தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

செயற்கை உரத்திற்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள், பழுப்பு நிலக்கரிப் பகுதியில் இலகுவாகக் கிடைக்கின்றன என்ற காரணத்தால், நெய்வேலியை சிபாரிசு செய்திருக்கிறது அக்குழு.

ஏதாவது காரணத்திற்காக, நெய்வேலியில் புதிய உரத் தொழிற்

(4-ம் பக்கம் பார்க்க)

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

1958-ல் உற்பத்தி துவங்குமாம்

ரஷ்யாவின் உதவியுடன் மத்திய பிரதேசத்தில் துவங்கப்படும் பிலாய் உருக்குத் தொழிற்சாலை, வரும் 1958-ல் உற்பத்தியைத் துவங்கும் என, ரஷ்ய நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

அந்த ரஷ்ய நிபுணர்கள், தொழிற்சாலை சம்மந்தப்பட்ட விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்காக மாநில முதன் மந்திரி பண்டித சுக்லாவைச் சந்திக்க வந்துள்ளனர் எனத் தெரிகிறது.

அக்டோபர் மாதத்தில், தொழிற்சாலைக்கான இறுதி நகல் திட்டம் இந்திய சர்க்காரிடம் தாக்கல் செய்யப்பட்டுவிடும் என்றும் தெரிய வருகிறது.

தினந்தோறும் ஓராயிரம் டன் வீதம் இரண்டாண்டுகளுக்குள் தொழிற்சாலைக் கட்டிடம் முழுவதும் முடிவதற்காக சிமெண்ட் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கிமோர் சிமெண்ட் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமெண்டை பரிசோதித்துப் பார்த்துக்கொள்வதற்காக, தொழிற்சாலையின் நிர்வாகியான எஸ் என். மேதா என்பவருடன் ரஷ்ய நிபுணர்கள் சென்றுள்ளனர் என்று தெரிய வருகிறது.

பிறகு அங்கிருந்து நிலக்கரி 'கமிஷனரா'ன ஆர். கே. ராமதயானி என்பவரைச் சந்தித்து திட்டத்திற்கு எந்த வகையான, எவ்வளவு நிலக்கரி கிடைக்கும் என்பது குறித்துப் பேசுவதற்காகக் கல்கத்தா செல்வர் என்றும் தெரிய வருகிறது.

தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் வரும் ஆண்டில் வந்து சேரும் என்றும், தொழிற்சாலை நிறுவப்பட இருக்கும் பிலாய் எனுமிடத்தைப் பார்வையிடுவதற்காக, இந்திய சர்க்கார் இரும்பு உருக்கு இலாக்கா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மாநில முதல்வர் பண்டித சுக்லாவுடன் ஜூலை 17-ல் செல்வார் என்றும் அறிய வருகிறது.

'விசாரியுங்கள் அல்லது விரட்டியடியுங்கள்'

பஞ்சாப் மந்திரிக்கு எதிராக மீண்டும் புகைச்சல்!

"மந்திரி ஜெகத் நாராயணன் மீது சாட்டப்பட்ட லஞ்சம், ஒழுங்கீனம் ஆகிய குற்றங்களினால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப் போக்க வேண்டுமானால், நீதிபதிகளைக்கொண்டு வெளிப்படையாக விசாரிக்கப்படுவது கட்டாயமாகும். ஏதாவது ஒரு அரசியல் காரணத்திற்காக, அத்தகைய விசாரணை நடத்துவதை காங்கிரஸ் கட்சி விரும்பாத பட்சத்தில், அவருடைய நேர்மையில் சந்தேகம் ஏற்பட்டுள்ள காரணத்தால், அவரை அமைச்சர் பதவியிலிருந்து விரட்டிவிட முன்வரவேண்டும்."

"வேறு ஒரு ஜனநாயக நாட்டில் இப்படி ஒரு அமைச்சரின் நேர்மையில் சந்தேகம் ஏற்பட்டுவிடுமானால், அவர் ஒரு விநாடி கூட பதவியில் தொடர்ந்து இருக்க முடியாது. அவரை, அவருடைய கட்சியும் தாங்கிக்கொண்டிருக்காது. நம்பிக்கை இழந்த

(4-ம் பக்கம் பார்க்கவும்)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—6—'55 வியாழன்

ஓரவஞ்சனைக்கு இரு சான்றுகள்!

பெரிய பெரிய நீர்த்தேக்க அணைக்கட்டுத் திட்டங்களையும், மின்சார உற்பத்திச் சாதனங்களையும் இந்தியத் துணைக்கண்டத்தின் வட பகுதியிலேயே நிர்மாணிப்பதில், இந்தியப் பேரரசு அக்கரை கொண்டிருக்கும் அளவிற்கு, தென்னாட்டின்பால் அக்கரை காட்டவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனை இயல்பை, முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஐயந்திரிபற அறிவித்துக்கொண்டும் இருக்கிறது.

இந்தியப் பேரரசு, வடநாட்டை வளமுள்ளதாக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொள்வதையும், தென்னாட்டை அறவே வெறுத்து ஒதுக்கித் தள்ளிவருவதையும், நாம் பல முறை, மறுக்க முடியாத சான்றுகளுடன் எடுத்துக்காட்டி வந்துள்ளோம். தென்னாட்டு மக்களின் அதிருப்தி உச்ச நிலையைப் பெற்றுவிடாமல் இருப்பதற்கும், சொந்த காங்கிரஸ் கட்சியினரின் எதிர்ப்பை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்துவதற்கும், கண்துடைப்பு வேலையாக, ஏதாவது ஒன்றிரண்டு ஏற்பாடுகளை, தென்னாட்டில் சிறுவ அளவில் ஏற்பாடு செய்ய இருப்பதாக இந்தியப் பேரரசு வெறும் படாடோபமாக விளம்பரப்படுத்துவதையும் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

• நயமான நல்லுரையும், கண்டிப்பான கண்டனக் குரலும், இந்தியப் பேரரசின் பிறவிக் குணத்தை மாற்றிவிட உதவாது என்பதுதான், நாம் அனுபவத்தில் கண்டுவரும் உண்மையாகவும் இருந்துவருகிறது. புலியும் புள்ளிமானும் சேர்ந்து இருந்துகொண்டு, புலி பாய வரும்பொழுதெல்லாம் கோவெனக் கதறி புல்வாய் அபயம் கோருவதும் இருக்கக்கூடாது. இந்தப் போக்கு என்றென்றும் புல்வாயின் உயிருக்கு உலையாக முடியக் கூடியதேயாகும். எனவே, நாளை கோர இருப்பதை, இன்றே, 'விலகிக் கொள்ளுகிறோம், விலக்கிவிடுங்கள்' எனப் புல்வாய் நிலைக்கு ஆக்கப்பட்டுள்ள திராவிட நாட்டவர், கால தோஷத்தால் புலிபோல் உருவெடுத்துள்ள வடநாட்டாரை எச்சரிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதைத் தவிர வேறு வழி, திராவிடர் நல்வாழ்வு பெற, தென்னாடு பல்வளம் பெற்று வடநாடு போன்று முன்னேற, நமக்குப் புலனாகவில்லை. நம்மைத் தூற்றும் அளவுக்கு அறிவும் ஆற்றலும் இருப்பது போன்று, இத்துறையில் வேறு வழி காட்டுவதற்கான அறிவோ ஆற்றலோ நம் நாட்டு காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

நமது போக்கு கண்டு, நமது கோரிக்கை கேட்டு, காங்கிரஸ் தலைவர்கள் சீறுகின்றனர்! முகம் சிவப்பேற நம்மை நோக்குகின்றனர்!

அந்த நோக்கும், சீற்றமும், நமது கோரிக்கை தவறானது—தகாதது—எனப் பொதுமக்களுக்கு உணர்த்திவிடும் என்பது, அக்காங்கிரஸ் கனவான்களின் ஆழ்ந்த நம்பிக்கை போலும்! நிற்க,

நீர்த்தேக்க அணைக்கட்டு ஏற்பாடுகள் இருக்கட்டும்; மின்சார உற்பத்தி அமைப்புகள் கிடக்கட்டும்; சித்தரஞ்சன் தொலையட்டும்; சிந்திரி ஒழியட்டும்; பாய்லி போகட்டும்; நூர்கேலாவும் தொலையட்டும்; அவ்வளவு வளந்தரும் வசதிகளையும் வடநாட்டிலேயே இந்தியப் பேரரசு அமைத்துக்கொள்ளட்டும். சாதாரண உப்பு, பருப்பு, மிளகாய் வகையிலாவது, தென்னாட்டிற்குத் திங்கிழைப்பதை இந்தியப் பேரரசு தவிர்த்து நடந்துகொள்ளக் கூடாதா? அப்பொருட்களில் வியாபாரம் செய்யும் தமிழர்களுக்கு ஏன் வீணைத் தொல்லை கொடுக்க வேண்டும்?

தென்னாட்டு வியாபாரிகள், பஞ்சாப், இராஜஸ்தான் போன்ற வடநாட்டுப் பகுதிகளில், பருப்பு போன்ற நவதானியங்களைக் கொள்முதல் செய்துள்ளனர். பிப்ரவரி திங்களில் அப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன.

அப்பொருட்களை காலாகாலத்தில் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான புகைவண்டி 'வாகன்' வசதிகள் கிடைக்கப் பெறவில்லை. அதனால் கொள் முதல் செய்யப்பட்ட நவதானியங்கள், அப்பகுதியில் இருக்கும் புகைவண்டி நிலையங்களில் கெட்டுக் கிடக்கின்றன.

பொருட்கள் பழுதடைவதோடு மட்டும் நின்றுவிடாது! களவு போவதும் மிக மிகச் சாதாரண நிகழ்ச்சியாகும்!

உணவுப் பொருட்கள் கெடுவதோடு, சென்னையில் மேற்படி பொருட்களின் வருவாய் குறைவால், கைவசம் இருக்கும் பொருட்களின் விலையும் பல மடங்கு கூடிவிடும் என்பது, சொல்லாமலே விளங்கக் கூடியதாகும்.

இந்தத் தகவலை, தென்னிந்திய வியாபார சங்கத்தினர், இந்தியப் பேரரசின் இரயில்வே துறையினருக்கு அறிவித்துள்ளனர்—உதவி புரியுமாறு உருக்கமாகக் கோரியும் உள்ளனர்!

தங்கள் கோரிக்கையில்,

"பம்பாய், கல்கத்தாவிற்கு மட்டும் தேவையான 'வாகன்'கள் ஒதுக்கப்பட்டுள்ளன; ஆனல், சென்னை மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது."

என்ற நிகைப்பூட்டும் உண்மையையும், தென்னிந்திய வியாபார சங்கத்தினர் எடுத்துக்காட்டியுள்ளனர்.

மேற்படி உண்மையை 'திகைப்பூட்டும் உண்மை' என நாம் குறிப்பிட்டது, தென்னிந்திய வியாபார சங்கத்தினர் வாயிலிருந்தும் இத்தகவல், துலிந்து தரப்படுகிறதே என்பதினாலேயேயாகும்.

'தேவையான அளவு 'வாகன்'கள் பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளன!'

அதே நேரத்தில், 'சென்னை மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது!'

இப்படிக் கூறுவது திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல—தென்னிந்திய வியாபார சங்கம் இவ்வாறு திட்டவட்டமாகக் கூறுகிறது!

அடுத்தது மிளகாய் வற்றல் விவகாரம்.

தமிழ் நாட்டில் விளைவிக்கப்படும் மிளகாய் வற்றலுக்கு சிலோனில் நல்ல மதிப்பு உண்டு. அந்த மிளகாயைக் கூடுதலான விலை கொடுத்து, அங்குள்ளோர் வாங்கத் தயங்குவது கிடையாது.

இந்த உண்மையைத் தெரிந்துள்ள வங்காளம், பஞ்சாப், சவுராஷ்டிரம், பீகார் மாநிலங்களில் உள்ள ஏற்றுமதி வியாபாரிகள், தமிழ் நாட்டு மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்து, தங்கள் தங்கள் மாநிலங்களுக்குக் கொண்டு சென்று, அதைத் திரும்பவும் புகைவண்டி மூலம் சென்னைக்குக் கொண்டுவந்து, சென்னைத் துறைமுக வழியாக சிலோன் தீவுக்கு ஏற்றுமதி செய்து, தமிழ் நாட்டு ஏற்றுமதியாளர்களின் வர்த்தகத்தில் மண்ணை அள்ளிக் கொட்டிவருகின்றனர்.

மிளகாய் வற்றல் ஏற்றுமதியில், இந்தியப் பேரரசு ஒரு கொள்கை அனுசரித்து வருகிறது. அதாவது, தனது மக்களின் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் மாநிலங்களிலிருந்து மட்டுமே, மிளகாய் வற்றல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பதே அவ்வடிப்படை கோட்பாடு ஆகும்.

இந்த அடிப்படை கொள்கையைக் கொண்டு பார்க்கும் பொழுது, சென்னைக்குத்தான், மிளகாய் வற்றல் ஏற்றுமதி விஷயத்தில், அதிகமான அளவு பங்கு ஒதுக்கப்பட வேண்டும்.

தம் மக்கள் தேவைக்குக் குறைவாகவே உற்பத்திச் செய்யப்படும் மாநிலங்களான, பீகார், பஞ்சாப், வங்காளம், சவுராட்டிரம் போன்ற மாநிலங்களுக்கு, மிளகாய் வற்றல் ஏற்றுமதி விஷயத்தில் மிளகாய் வற்றலை மிகுதியாக விளைவிக்கும் சென்னைக்குக் காட்டப்படும் சலுகையைக் காட்டிலும், கூடுதலான சலுகையை இந்தியப் பேரரசு காட்டி வருகிறது.

அம்மாநில ஏற்றுமதி வியாபாரிகளுக்கு இந்தியப் பேரரசு காட்டிவரும் மிதமிஞ்சிய சலுகையின் காரணமாக, தமிழ்நாட்டில் மிகுதியாக உற்பத்தியாகும் மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்து தங்கள் பகுதிகளுக்குக் கொண்டுபோய், அதே மிளகாய் வற்றலைத் தங்கள் பகுதிகளில் விளைந்தது எனப் பொய்கூறி, அதிகப்படியான ஏற்றுமதிக்கு இந்தியப் பேரரசிடம் அனுமதியும் பெற்றுவிடுகிறார்கள் அந்த எத்தர்கள்!

இதனல், மிளகாய் வற்றலை உற்பத்தி செய்யும் தமிழ்நாட்டு விவசாயிகள் பலன் பெறுவது கிடையாது! இங்குள்ள ஏற்றுமதியாளர்களும் பலனடைவது கிடையாது!

தமிழ்நாட்டில் மிகுதியாக விளையும் மிளகாய் வற்றலை, தங்கள் இலாப வேட்டைக்குரிய அரிய பொருளாக ஆக்கிக் கொள்ளுகின்றனர், வடநாட்டு வியாபாரத் திமிங்கிலங்கள்! இப்பகிரங்கக் கொள்ளைக்கு இந்தியப் பேரரசு உடந்தையாக இருந்துவருகிறது!

இந்த உண்மையை, மதுரை வெளிநாட்டு ஏற்றுமதியாளர் சங்கத்தினர், மனங்குமுறி குறிப்பிட்டுள்ளனர், சென்னை அரசாங்க விவசாய மந்திரியிடம்!

இது முறையா? இது நீதியா? தர்மமா?—என இந்தியப் பேரரசைக் கேட்கும்படி, விவசாய மந்திரியை வேண்டிக் கொண்டிருக்கின்றனர்—மதுரை ஏற்றுமதி வர்த்தகர்கள்!

விஷய விளக்கம் கிடைத்திருக்கிறது — விமோசனம் கிடைக்காது; ஆட்சி அதிகாரம் முழுதும் டெல்லியில் அல்லவா இருக்கிறது!

அந்த அதிகாரம் துண்டிக்கப்பட்டு, நமது விவசாய அமைச்சராக வருகிறவரிடம் அதற்குரிய அதிகாரம் தங்கும்படி, அரசியல் அமைப்பு திருத்தப்பட்டால் அல்லவா, மதுரை வியாபாரிகளின் மனக்குறைநீங்க மார்க்கம் பிறக்கும்?

கட்டுண்டோம்; காலத்தை மாற்றுவோம் எனக் கூறுவதை தவிர, இந்நிலையில். நம்மால் வேறு என்ன செய்ய முடியும்?

இதற்குப் பரிகாரம் தேடும் ஆற்றல், நமது அமைச்சர்களிடமும் இல்லாமல் அல்லவா இருக்கிறது! அவர்கள் டெல்லி ஆதிபத்தியத்தின் பில்லை சேவகர்கள்தானே! அவர்களால் மட்டும் வேறு என்ன செய்துவிட முடியும்?

சினப்பர்! சீறுவர்! கோரிக்கையை முடித்துவிட்டதாகக் கொக்கரிப்பர்! இவைகளைத்தானே நாம் அமைச்சர்களிடமிருந்து தினம் தினம் கண்டு வருகிறோம்!

கிழக்கு பாகிஸ்தான் அகதிகள் குடியேற்றம்!

ஐதராபாத்திற்கு 500 குடும்பங்கள்!

ஏற்கனவே குடியேற்றப்பட்டவர்கள் போக, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள 30,000 குடும்பங்கள், மேலும் குடியேற்ற வேண்டிய நிலையில் இருந்துவருகின்றன; அவைகளில் 500 குடும்பங்களை ஐதராபாத்தில் குடியேற்ற தீவிரமாக முயற்சிக்கப்பட்டு வருகிறது.

அகதிகள் விஷயத்தில் அக்கரை கொண்டுள்ள கிழக்கு வங்க அரசாங்க சார்பிலும், இந்தியப் பேரரசு சார்பிலும், அகதிகளைக் குடியேற்றுவதற்குத் தகுந்த இடம் எதுவென, ஐதராபாத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

ஐதராபாத் நீங்கலாக மத்திய பிரதேசம், ஆந்திரா, ஒரிசா, அசாம் மாநிலங்களில் அகதிகளைக் குடியேற்ற இந்தியப் பேரரசு திட்டமிட்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ், இந்திய சர்க்கார், இவ்வாண்டு மே திங்களில் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மொத்தம் 2,71,75,645 ரூபாய் வழங்கியுள்ளனர்.

புனர்வாழ்விப்பு நிதி நிறுவனம், சென்ற ஆண்டு மே மாதத்தில் 89 மனுக்கள் மீது மொத்தம் ரூ. 65 லட்சம் கடன் வழங்கியது.

"சீன மக்கள் குடியரசு ஐ.நா.-வில் இடம்பெறும்"

பண்டித நேரு நம்பிக்கை

மாஸ்கோவிலுள்ள மிகப் பெரிய டைனமோ ஸ்டேடியத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில், பண்டித நேரு, ரஷ்ய மக்களுக்கும் பிரதமர் புல்கானினுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு 'இந்தியா ரஷ்யாவிடம் ஒருபோதும் நேசமற்றமனப்பான்மை கொண்டதேயில்லை' என்று குறிப்பிட்டுவிட்டு ரஷ்ய மக்களின் நல்லாசியுடனும், நல்லெண்ணத்துடனும் தாம் நாடு திரும்புவதாகவும் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில், "சீன மக்கள் குடியரசு, விரைவிலேயே ஐ. நா. சபையில் இடம் பெற இருப்பதை நாம் வெகு விரைவிலேயே காண இருக்கிறோம்; கிழக்கோடியிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நடைபெறும் முயற்சிகளனைத்தும் வெற்றிபெறப் போவதையும் நாம் கண்கூடாகப் பார்ப்போம் என்று நிச்சயமாக நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

நேரு பேசிய பின், சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், தமது தாய்நாடு குறித்து பண்டிதர் கூறிய 'அன்பான' வார்த்தைகளுக்காகத் தாம் நன்றி கூறுவதாகத் தெரிவித்தார்.

"பாண்டுங் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ரஷ்யாவும் வரவேற்கிறது; ஆக்கவேலைகளிலேயே ஈடுபட்டுள்ள நமது மக்கள் யுத்தத்தை விரும்பவே இல்லை; இந்தியா—ரஷ்யா உறவானது 'சமாதானமாகக் கூடி வாழ்வது' என்ற 'லெனின் கொள்கை'யை ஊர்ஜிதம் செய்வதாகும்," என்றார்.

நிருபர்களிடை நேரு

லண்டனுக்குச் செல்வது குறித்து நிருபர்கள் வினவியபோது, பண்டித நேரு, தாம் லண்டன் செல்வது குறித்து இன்னும் நிச்சயமான முடிவெதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், அதற்கான ஏற்பாடுகள் செய்வது மிகக் கஷ்டமானதென்றும், அப்படியே ஒருவேளை தாம் லண்டனுக்குச் சென்றாலும்கூட அங்கு சொற்பகாலமே தங்கக் கூடுமென்றும், ஏனெனில், தாம் மிக விரைவிலேயே இந்தியா திரும்ப வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

"ஆசியாவிலும், உலகத்திலும் நிலவி வரும் நெருக்கடிகளைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?" என்று கேட்டபோது, நேரு, 'ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் காட்டிக் கொள்ளவேண்டும்; துவேஷத்தை உருவாக்கக்கூடிய கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது; முதலில் சுமுகமான உறவு நிலையை உண்டு பண்ணிய பின்னரே பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"சோவியத் ரஷ்யாவிடமிருந்து நான் பண உதவியையோ அல்லது கடனையோ எதிர்பார்க்கவே இல்லை; ஆனல், தொழில் நுட்ப உதவியையே எதிர்பார்த்திருக்கிறேன்—அதுவும் வியாபார முறையிலேயேதான் இருக்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு உதவி அளிக்க அரசியல் நிபந்தனைகள் எதுவும் கிடையாதல்லவா?" என்ற கேள்வி ஒன்றுக்கு "அரசியல் நிபந்தனைகள் எதுவும் இல்லை" என்றாராம்.

'மாதிரி சோஷலிச'த்தின் பொய்க்கால் குதிரை நடனம்

தேபரின் 'தத்துவார்த்தம்' கூறும் உண்மை

என்.வி.நடராசன், சிற்றரசு முழக்கம்

கொடுங்கையூர் தி. மு கழகச் சார்பில் 14—6—55 மாலை 6-30 மணிக்கு மூலக்கடை லட்சுமி தியேட்டர் அடுத்த திடலில், ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் கழகச் செயலாளர் தோழர் வெ. ராகவன் தலைமையில் நடைபெற்றது. தொழிலாளர் தோழர்கள் ஏராளமாக இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் மு. கிருஷ்ணமூர்த்தி, க. அறிவழகன் ஆகியோர் கழகக் கொள்கையினை விளக்கிப் பேசினர்.

அடுத்துத் தோழர் என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"'ஆவடி காங்கிரஸ் ஒரு பெரிய திருவிழாவைப் போன்று நடத்தப்பட்டது' என்று பெருமை பேசிக்கொள்ளலாமேயன்றி அம்மாநாட்டில் நிறைவேறிய பிரதான தீர்மானம் என்று பறைசாற்றப்படும் 'மாதிரி சோஷலிசத் தீர்மானம்' வெறும் ஏமாற்றுப்படலம் என்பது இன்று வெளியாகிவிட்டது.

"இதனை ஆவடி காங்கிரசின் போதே தி. மு. கழகம் எடுத்துக் கூறிய சமயத்தில் தென்னாட்டுக் காங்கிரஸ் தோழர்கள் நம்மீது சீறி விழுந்தனர்; 'இவ்வளவு பிரமாதமாக மாநாடு நடத்த முடியாத திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ஏதாவது குறை சொல்லவேண்டுமென்பதற்காகவே மாதிரி சோஷலிச தீர்மானத்தைக் குறித்து அரசியல் யூகமின்றி ஏதேதோ பேசி வருகின்றனர்,' என்று அங்கலாய்த்தனர். காங்கிரசார் இவ்விதம் கூறுவதிலாவது ஓரளவு அர்த்தமிருக்கிறது; ஏன் — கம்யூனிஸ்டுகளே 'மாதிரி சோஷலிச'த் தீர்மானத்தைக் கண்டு பரவசமடைந்து, 'எங்கள் கட்சி நடவடிக்கையின் எதிரொலிதான் காங்கிரசின் சோஷலிசத் தீர்மானம்,'— என்று உரத்த குரலில் பேசினர்; 'நேருஜி சீனத்துக்குச் சென்று வந்தது வீணாகவில்லை; வரும்போது சோஷலிச மனவளத்துடன் வந்தார்,' என்றும் பூரித்தனர் கம்யூனிஸ்டுகள்!

"ஆனால் நாம்தான்—நமது தி. மு. கழகம்தான், 'ஆளைக் கண்டு மலைக்காதே; அது—ஊதுகாமாலை என்பார்களே—அதுபோல, ஆர்ப்பாட்டமாக ஆவடி காங்கிரஸ் நடைபெறுகிறது என்பதற்காக—அதிலே நிறைவேற்றப்படும் தீர்மானத்திற்குக் கண்மூடிக்கொண்டு துதி பாடாமலும், அல்லது எதிர்க்கட்சியினர் என்பதற்காக வேண்டுமென்றே குறை கூறுகிற குறுகிய எண்ணம் இல்லாமலும், கூடுமான அளவு அரசியல் விவேகத்துடன் மக்கள் மன்றத்தில் அத்தீர்மானத்தின் அவலட்சணங்களையும், முதலாளித்துவமே 'மாதிரி சோஷலிச'த் தீர்மானத்தை வரவேற்று குதூகலிப்பதுமான சம்பவங்களையும் சுட்டிக்காட்டினோம்.

"நாம் எடுத்துக் கூறிய குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொள்ளும் வகையில், இன்று, காங்கிரசின் தலைவரே மாதிரி சோஷலிசத்திற்கு புதிய தத்துவார்த்தம் கூறியிருக்கிறார்.

"இத்திங்கள் 10-ம் நாள் ஹுசாரிபாக் எனும் நகரில், அ. இ. கா. தலைவர் தேபர் அவர்கள், 'மாதிரி சோஷலிச'த்தைப்பற்றி நிருபர்களிடம் கூறுகையில், 'சோஷலிசம் என்றால் சோஷலிச சர்க்காரை நிறுவுவதென்பதல்ல; அதைவிட மக்கள் மீது சோஷலிசத் தத்துவங்களைத் திணிப்பதில்தான் காங்கிரஸ் அக்கரை கொண்டுள்ளது; இதல்லாமல், சோஷலிச ராஜ்யத்தையே நிறுவினால்—சமயம் வாய்த்தால் ராஜ்ய அதிகாரிகளே சர்வாதிகாரிகளாக மாறிவிடக்கூடும்,'—என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"காங்கிரஸ் தலைவர் தேபரின் தத்துவார்த்தத்தைப் பார்த்தீர்களா? மாதிரிசோஷலிசம் பொய்க்கால் குதிரை நடனத்திற்கு ஒப்பாகி விட்டதல்லவா?

"வடநாட்டு ஆதிக்கத்தின் திருவிளையாடல்களை நன்கறிந்த திராவிட முன்னேற்றக் கழகம் முன்னமேயே இதுபற்றி எச்சரித்தது; எனினும் எங்கள் மீது மாற்றுக் கட்சித் தோழர்கள் காய்ந்து விழுந்தனர்; இன்று அத்தோழர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இனியாவது தி. மு. கழகம் கூறுவதை நிதானத் தன்மையோடு சிந்திப்பார்களா என்று கேட்கிறோம்.

"எனவே, ஆவடி காங்கிரஸ் மாநாட்டைப்போல நமது மாநில மாநாடு வீண் ஆடம்பரங்களுடன் நடைபெறாது. அதுமட்டுமல்ல--மக்களை ஏமாற்றும் பித்தலாட்டங்களை கொண்ட முடிவுகள் நமது மாநில மாநாட்டிலே காண முடியாது. நம்மால் முடிந்தவரை—நமது சக்திக்கும், மக்களின் ஆதரவுக்கும் ஏற்ப, நமது முடிவுகளை—நாட்டுப் பிரிவினையைப் பெறும் வகையில் செய்வோம் — அதன் வழி தொடர்ந்து பணியாற்றுவோம்.

"எனவே, பாட்டாளி மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், திராவிடத்தின் நல்வாழ்வுக்கும் ஆனவகையில் தொண்டாற்றக்கூடியது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறேன். தொழிலாளர் தோழர்கள் ஏராளமாகக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டுகிறேன்," என்று குறிப்பிட்டதோடு, கவர்னர் சம்பளச் செலவு குறைவு பிரச்சினை பற்றியும் எடுத்துரைத்தார்.

★

அடுத்து தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"எனக்கு முன்பு பேசிய தோழர் நடராசன் அவர்கள் 'மாதிரி சோஷலிச'த் தீர்மானத்தின் மர்மங்கள் வெளியாவதை விவரித்துப் பேசினார். காங்கிரஸ்காரர்களிடத்தில்—அதிலும் குறிப்பாக வடநாட்டு ஆதிக்கக்காரர்களிடம் நாம் இதைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? இந்தியத் துணைக் கண்டத்தை அடக்கியாள நினைக்கும் நேரு பண்டிதரின் சர்க்கார், சமயத்திற்கேற்றதுபோல் மக்களை ஏய்ப்பதில் இப்போது கைதேர்ந்து வருகிறது; இன்னும் சில காலம் சென்றால், 'பொதுத் தேர்தலில் என்ன சொல்லி ஏமாற்றலாம்' என்பதை, 'ஆசியாவின் ஜோதி' ரஷியாவிலிருந்து திரும்பிவந்ததும் கண்டுபிடித்து, காமராசர் சர்க்காருக்குச் சொன்னாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவுக்கு அரசியலில் நேர்மையில்லாமல், ஏதோ அதிகாரம் கையில் சிக்கிவிட்டது என்பதற்காக 'ததிங்கிணதோம்' போடுகின்றனர் பாரதமாதா புத்திரர்கள்!

"நாட்டுப் பிரிவினையை நாம் மட்டுமா கேட்கிறோம்? அகில இந்தியாவிலும், இன்று, இந்த உரிமை முழக்கம் செய்யப்படுகிறதே! பஞ்சாபில் இன்று நடப்பதென்ன? தனி மாநிலம் அமைய வேண்டுமென்று முன்னைய காங்கிரஸ் தலைவர் தாரா சிங் அவர்களும், அவரது கட்சியினரும் போராடவில்லையா? அதுபோலவே, மகாராஷ்டிரத்திலும் புகை சூழ்ந்திருக்கவில்லையா? இவைகளையெல்லாம் மறைத்துவிட்டு, நேரு பண்டிதர், மற்ற நாடுகளுக்குச் சென்று பெருமை பேசுகிறார். இதைவிட பெருமையும் வீராப்பும் பேசியவர்களெல்லாம் தங்களின் ஆதிக்கம் தங்கள் காலத்திலேயே குப்புறக் கவிழ்ந்ததைக் கண்டுங்கூட, நேரு பண்டிதர், இவ்வாறு ஒரு மகத்தான இனத்தின் உரிமையைப் பறித்து அடக்கி ஆள எண்ணுவது பைத்தியக்காரத்தனமாகும்.

"இவைகளை யெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் எடுத்துக் கூறினால், எங்களை 'கடவுள் துரோகி' என்று தூற்றுகிறார்கள்;—ஏதோ, இவர்கள்தான் கடவுளை நேரிலே கண்டுவிட்டு வந்தவர்கள்போல!

"வீணாக எங்களை, 'கடவுள் துரோகிகள்' என்று சொல்லுவதில் அவர்களுக்கு என்ன இலாபம்? நாங்களெல்லாம் துரோகியாயிருந்தால், கடவுள் எங்களை விட்டு வைப்பாரா? அவருக்கு ஒன்றும் தெரியாததுபோல அல்லவோ இந்த 'புராண பக்தர்கள்' கூப்பாடு போடுகின்றனர்? இது கடவுளின் பெருமையையே குறைப்பதாக இல்லையா?" என்று கூறிவிட்டு, மற்றும் சமுதாய நிலை குறித்தும் நகைச்சுவையுடன் பேசினார்.

தன்னையே மறந்த அஞ்சல் அதிகாரி!

ரெய்கார், ஜூன் 20—

ரெய்கார் மாவட்டத்திலுள்ள சப்-போஸ்ட் ஆபீசில் கிடைத்த ஒரு தந்தியை பட்டுவாடா செய்வதற்காக, அத்தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விலாசதாரரைத் தேடித் தேடி அலைந்திருக்கிறார் அஞ்சல்காரர். பல மணி நேரமாக அலைந்தும் கண்டுபிடிக்க முடியாமல் மிகச் சலிப்புற்ற அந்த சேவகர், மேற்படி தந்தியை மீண்டும் அஞ்சல் நிலையத்திற்கே கொண்டு வந்திருக்கிறார்.

அஞ்சல் நிலையத்தில், அத்தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியைப் பார்த்ததும், அது அந்த போஸ்ட் - மாஸ்டருக்கே தான் வந்துள்ளதென்று அப்போது கண்டுபிடித்தனராம்!

பேராவூரணியில் அண்ணா

மாநாட்டு நிதி அளிப்பு - பொதுக்கூட்டம்

20—6—55ல் பேராவூரணியில், மாநில மாநாட்டு நிதி அளிப்புப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், என். எஸ். இளங்கோ, கே. அடைக்கலம், கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசியபின் அண்ணா அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

அண்ணா அவர்களிடம் பல கிளைக் கழகங்கள் மூலம் பேராவூரணி தி. மு. கழகச் சார்பில் ரூ. 209 மாநில மாநாட்டு நிதிக்காகக் கொடுக்கப்பட்டது.

நிதி அளிப்பிற்குப் பின்னர், அண்ணா அவர்களுக்கு பேராவூரணி, குருவிக்கரம்பை, ஆவணத்தாங்கோட்டை, நாடியம், கல்லூரணிக்காடு ஆகிய கிளைக் கழகங்களின் சார்பில் வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன.

பொதுக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

பொதுக்கூட்டத்திற்கு முன்னர் கழகத் தோழர்கள் கழகக் கொடிகளைத் தாங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

பழநி தி. மு. கழகம்

விஷமிகளின் பிரச்சாரத்திற்கு மறுப்பு

பழநி, ஜூன் 16—

சென்ற 26—5—55ல் பழநியில் தேவாங்க சமூகத்தினரின் சவுண்டம்மன் விழாக் கொண்டாட்டத்தின்போது நடைபெற்ற சம்பவங்களில் தி. மு. கழகமும் கலந்துகொண்டது என விஷமப் பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சாரத்திற்கு மறுப்புத் தந்து, துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலமாக பழநி நகர தி. மு. கழகக் கிளை நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளது.

பழநியில் நடைபெற்ற தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் மேற்படி நிகழ்ச்சி பற்றி எவ்வித முடிவோ, முயற்சியோ மேற்கொள்ளப்படவில்லை என்றும், மேற்படி நிகழ்ச்சிக்கும், தி. மு. கழகத்திற்கும் தொடர்பு காட்டி கழகத்திற்குக் களங்கம் விளைவிக்க சில விஷமிகள் செய்த விஷமப் பிரச்சாரமே அல்லாமல், கழகத்திற்கும் இந்த நிகழ்ச்சிக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்லூரணி பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தல்

பாலூர்சத்திரம்—

சென்ற 17-ந் தேதியன்று, உதவி பஞ்சாயத்து அதிகாரி திரு. தங்கையா தலைமையில் நடைபெற்ற பஞ்சாயத்துக் குழு உறுப்பினர் தேர்தலில் தோழர் க. பூசமணி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ந-நி)

புதுப்பட்டி (அலங்காநல்லூர்) இளங்கோ மன்றம்

5—6—55 மாலை 6½ மணிக்கு, மேற்படி மன்றத்தின் மூன்றுவது ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் க. அறிவழகன், எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தைவற்புறுத்தியும், மற்றும் பல பொருட்கள் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

6—6—55 :

திருவிடமருதூர் தி. மு. கழகச் சார்பில் தெற்கு வீதி திடலில், தோழர் வெங்கடாசலம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சவுந்தரராசன், நாராயணசாமி, என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பின், தோழர் என். வி. நடராசன், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கியும், அதற்கான முயற்சியில் தி. மு. கழகம் இதுவரை ஆற்றியுள்ள தொண்டினையும், மாநில மாநாட்டைக் குறிப்பிட்டும் சொற்பொழிவாற்றினார்.

7—6—55 :

மாலை 6 மணிக்கு, பொறையார் அடுத்த காட்டுச்சேரி கடைத் தெரு திடலில், தோழர் எம். கோவிந்தராசுலு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. ஜம்பு, கழகக் கொடியினை உயர்த்திவைத்துப் பேசினார். அடுத்து தோழர் என். கிட்டப்பா பேசியபின், தோழர் என். வி. நடராசன், விவசாயத் தொழிலாளர்களின், நிலை குறித்தும், அப்பிரச்சினையில் தி. மு கழகம் கொண்டுள்ள கருத்தினையும் விளக்கியதோடு, நாட்டுப் பிரிவினை பெற்றால்தான் தென்னாட்டுத் தொழிலாளரின் உண்மையான உரிமை நிலைபெற்றிருக்க முடியும் என்றும் விரிவுரையாற்றினார்.

8—6—55 :

மாலை 6 மணிக்கு சீர்காழி அடுத்த கொண்டல் எனும் ஊரில், தெற்கு வீதியில் தி. மு. கழகச் சார்பில், தோழர் அரங்கசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. துவக்கத்தில் தோழர்கள் சவுந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் சமுதாய நிலை குறித்தும், தி. மு. கழகக் கொள்கையினை விளக்கியும் பேசினார்.

10—6—55 :

மாலை 7 மணிக்கு மேலவாழக்கரை பகுத்தறிவு மன்றச் சார்பில், சத்திரத் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் சம்பந்தம் தலைமை வகித்தார். தோழர் என். எஸ். இளங்கோ பேசுகையில், 'அரசியல் உரிமை நிலை பெற்றிருக்க வேண்டுமானால் மக்கள், அறியாமையிலிருந்து தெளிவு பெற வேண்டும்,' என்று விளக்கினார்.

அடுத்த தோழர் என். வி. நடராசன் பேசுகையில், பகுத்தறிவு இயக்கம் கடந்த 30 ஆண்டுகளாக இந்நாட்டில் ஆற்றியுள்ள—ஆற்றி வரும் மகத்தான பணியையும், அவ்வியக்கத்தின் வளர்ச்சியாகவும்—மக்களின் சக்தியாகவும் விளங்குகிற தி. மு. கழகம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு அரசியல் உரிமைக்குப் போராடி வருவதையும் விளக்கிப் பேசினார்.

12—6—55 :

காலை 8 மணிக்கு கடலூர் வன்னியர் பாளையம் தி மு. கழக அலுவலகத்திற்கருகில் கழகக் கொடியை தோழர் என். வி. நடராசன் உயர்த்திவைத்தார்.

மாலை 4-30 மணிக்கு கடலூர் ஓ. டி. 2-வது வார்டு தி. மு. கழகத் திறப்பு விழா, நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. தெ. ஆ. மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம் கழகக் கொடியை உயர்த்திவைத்துப் பேசினார். அண்ணா அவர்களின் படத்தைத் தோழர் முத்துரங்கம் திறந்து வைத்துப் பேசினார். இறுதியாக, தோழர் என். வி. நடராசன் கழகத்தைத் திறந்து வைத்துப் பேசியதுடன், மாநில மாநாட்டுக்கான பங்கீட்டினை தெ. ஆ. மாவட்டம் விரைவில் சேர்த்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அன்று மாலை 7 மணிக்கு திருப்பாப்புலியூர் மஞ்சகுப்பம் திடலில், வன்னியர்பாளையம் தி. மு. கழகக் கிளையின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. விருத்தாசலம் தோழர் சி. முனுசாமி தலைமை வகித்துப் பேசினார். பிறகு தோழர் என். வி. நடராசன் அவர்கள் நாட்டுப் பிரிவினையைப் பெறுவதே தி. மு. கழகத்தின் லட்சியமென்றும், இவ்வுரிமையை எவ்விதத்திலும் பெற்றே தீருவோமென்றும், அவசியமும், சூழ்நிலையும் ஏற்படும்போது ஐ. நா. சபைக்கும் இப்பிரச்சினையைத் தெரிவிக்க முடியுமென்றும், மற்றும் தற்கால அரசியல் நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

கணேசன்-நாகரெத்தினம் திருமணம்

19—6—55 காலை 10 மணிக்கு, திருச்சி சின்னையப்பிள்ளை சத்திரத்தில், திராவிடப் பண்ணை உரிமையாளர் தோழர் டி. வி. முத்து கிருஷ்ணன் அவர்களின் தம்பி தோழர் டி. வி கணேசன்—தோழியர் நாகரெத்தினம் திருந்திய திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'திருந்திய திருமணம்' என்பது பற்றி பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் க. அன்பழகன், கே.ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல், அ. பொன்னம்பலனார், தில்லை-வில்லாளன், ஜி. பி. சோமசுந்தரம், கே. கே. நீலமேகம், கைலை-அனந்தர், எம். பழனியாண்டி, எம்.எல்.ஏ., ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், மடல்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இத்திருமணத்தினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 10 நன்கொடை தரப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

ரஷ்யாவிடம் நேரு விடை பெற்ருர்

கூட்டறிக்கை வெளியிட்டு வார்சா புறப்பாடு

போப், ஈடனுடன் உரையாடுவார்

மாஸ்கோ, ஜூன் 23—

இந்தியப் பிரதமர் நேருவும்—சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானினும், நேற்று சோவியத் சர்க்கார் மாளிகையான 'கிரெம்லினில், தாங்கள் ஒப்புக்கொண்ட கொள்கைகள் அடங்கப்பெற்ற கூட்டறிக்கை ஒன்றில் கையொப்பமிட்டுள்ளனராம்.

நேரு–புல்கானின் கூட்டறிக்கை இன்று பிரசுரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்டித நேரு இன்று காலை வார்சாவுக்குப் புறப்படுகிருர்; அங்கிருந்து பெல்கிரேடுக்கும் செல்வார் எனத் தெரிகிறது.

பெல்கிரேடிலிருந்து பிரதமர் நேரு அடுத்த மாதம் ரோமுக்குச் செல்வார் என்றும், அங்கு இத்தாலிய சர்க்காரின் விருந்தினராக இருப்பாரென்றும், போப்பாண்டவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

பின்னர், ஜூலை 8-ந் தேதி அவர், பிரிட்டன் பிரதமர் ஈடனின் அழைப்புக்கிணங்க லண்டனுக்குச் சென்று இரண்டு நாட்கள் அங்கு தங்கிவிட்டு 10-ந் தேதியன்று தாய் நாடு திரும்புவார் என்றும் கூறப்படுகிறது.

எதிர்பார்க்கப்படவில்லை!

வாஷிங்டன், ஜூன் 22—

"இந்தியப் பிரதமர் நேரு, தமது ரஷ்யா சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்காவிற்கு வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படவில்லை," என்று, அமெரிக்க அரசாங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

★

உலகிலேயே முதன்மையான

அணுசக்தி நிலையம்!

பார்வையிடும் வாய்ப்பு நேருவுக்குக் கிடைத்தது

கம்யூனிஸ்டுகளல்லாத வேறு எவரும் இதுவரையிலும் பார்க்க அனுமதிக்கப்படாத சோவியத் ரஷ்ய அணுசக்தி நிலையத்தை நேரு பார்வையிட்டாராம்.

5,000 கிலோவாட் கொண்ட இத்தகைய நிலையம் உலகிலேயே முதன்மையானது என்று கூறப்படுகிறது.

இந்த நிலையம் மாஸ்கோ நகருக்கு வெளியே இருக்கிறதாம்.

நேரு பண்டிதருடன் ரஷ்யா சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள இந்தியப் பத்திரிகையாளர்கள் எவரும் இந்த நிலையத்திற்கு அழைக்கப்படவில்லை என்றும், கே. பி மேனன் மட்டும் உடன் சென்ருர் எனவும் தெரிகிறது.

டாக்டர் ஹோ-சி-மின்

ரஷ்யா, சீனு நாடுகளுக்குச் செல்கிருர்

வடக்கு வியட்நாம் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின் ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்வதற்காக, ஹனோய் விட்டு புறப்பட்டுவிட்டாராம்.

இந்தோ—சீனுவில் பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்து ஏழாண்டுகள் போராடி சுதந்திரம் பெற்றுத்தந்த 65 வயது நிறைந்த இந்தப் புரட்சித் தலைவர் முதல் முறையாக ரஷ்யாவிற்கும், சீனுவிற்கும் செல்வதாகத் தெரிகிறது.

வடக்கு வியட்நாமின் அரசாங்கத் தலைவராக அவர் கடந்த ஜூலையில் ஜினீவா மாநாட்டு ஒப்பந்தப்படி பதவி ஏற்ருர்.

'ரஷ்யா, சீனு ஆகிய நாட்டு மக்களுக்கும், வடக்கு வியட்நா

பம்பாயில் மாநாட்டு நிதியளிப்பு விழா

"26-6-55 மாலை 6 மணிக்கு, பம்பாய் — சைன், தாராவி, T. 15. 18 A.-161-ம் எண்ணுள்ள இல்லத்தில், மாதுங்கா தி. மு கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவும், பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு வரவேற்புக் கூட்டமும் நடைபெறும்,"

என்று, மாதுங்கா தி. மு. கழகச் செயலாளர் தோழர் தொ. மு அன்புச்செழியன் அறிவிக்கிருர்.

கழகக் கூட்டங்கள்

★

திருவொற்றியூர் (சென்னை)

சன்னதித் தெருவில்

25—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். மாசிலாமணி

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

எஸ். எஸ். இராசேந்திரன்

முன்னுள் சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பாராட்டி, வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்படும்.

★

குளச்சல்

25—6—55 மாலை 6 மணிக்கு பள்ளவிளை திடலில் நடைபெறும். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் பேசுவார்.

இந்திய நர்சுகளுக்குப் பாராட்டுப் பதக்கம்

செஞ்சிலுவை சங்கத்தின் சர்வதேசக் குழு 17 நாடுகளைச் சேர்ந்த 28 நாசுகளுக்கு 'பிளாரன்ஸ் நைட்டிங்கேல்' என்ற பாராட்டுப் பதக்கங்கள் வழங்க முடிவு செய்துள்ளது. பரிசு பெறும் நர்சுகளில் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர்.

புனர்வாழ்விப்பு நிதி நிறுவனம் இடம் பெயர்ந்தவர்களுக்கு 1955 ஏப்ரல் மாத இறுதிவரை மொத்தம் ரூ 950 94 லட்சம் கடனை வழங்கியது.

மக்களுக்கும் இருந்துவரும் சகோதர ஒற்றுமையை எனது பயணம் வலுப்படுத்தும்' என்று அவர், சுற்றுப்பயணத்தைத் துவங்குமுன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

விசாரியுங்கள் அல்லது.........

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பின்னர் அவரும் பதவியைப் பற்றிக்கொண்டிருக்க விரும்பவும் மாட்டார்."

—இக்கருத்துடைய அறிக்கை ஒன்றை, நான்கு அரசியல் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எட்டு தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ளனர்.

ஜெகத் நாராயணனுக்கு எதிராக விசாரித்து முடிவு கட்டப்பட்ட விவரத்தை, காங்கிரஸ் தலைவர் தேபர் விளக்கமாகக் கூறவேண்டும் எனவும், அக்கூட்டறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது

"மத்திய பார்லிமெண்டரி குழுவிடம், அரசாங்க ஏடுகள் அனைத்தையும் ஒப்படைத்ததாக பஞ்சாப் முதல் மந்திரி குறிப்பிட்டுள்ளார். தேபரும் அப்பொழுது அக்கூட்டத்தில் இருந்தார் என்றே நம்புகிறோம். தொடர்புடைய அரசாங்க ஏடுகளைக் காணுமலே தேபர், கேட்டதை வைத்துக்கொண்டு முடிவு கூறிவிட்டதாகப் பொது மக்கள் நம்பிக்கொண்டு இருக்கிருர்கள்."

இப்படியும் அக்கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

அகாலி, ம. சோ. கட்சி, கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மேற்படி கூட்டறிக்கையில் கையொப்பம் இட்டுள்ளனர்.

குஜராத்தியே போதனு மொழியாயிற்று

குஜராத் பல்கலைக் கழகத்தில், வர்த்தகம், விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளின் முலாண்டுப் படிப்பிற்குக் குஜராத்தி மொழியே போதனு மொழியாக ஏற்படுத்தப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை

கராச்சி, ஜூன் 22—

பாகிஸ்தான் புதிய அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் ஜூலை திங்கள் 7-ந் தேதியன்று கூட வேண்டுமென்று பாக். கவர்னர்-ஜெனரல் பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் கூறுகிறது.

நேற்று கைது செய்யப்பட்ட சிந்து மாநில முன்னுள் முதலமைச்சர் காஜி பஸ்லுல்லா ஜாமீனில் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

திருக்குறள் வகுப்பு

25—6—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், 'கல்லாமை' என்பது குறித்து திரு. மயிலை சிவமுத்து, திருமதி எம். ஏ. பரிமளா ஆகியோர் பேசுவர்.

எதிர்ப்பு வலுக்கையில்

இந்தியில் கலைச்சொல் அகராதியாம்!

பௌதீகம், ரசாயனம், கணிதம், தாவரம், சமூகவியல் ஆகிய ஐந்து பாடங்களில், செகண்டரி பள்ளிக்கூடங்களில் உபயோகப்படுத்துவதற்கான முடிவான தொழில் நுட்பச் சொற்களின் முதல் பகுதியை மத்திய சர்க்கார் கல்வி மந்திரி காரியாலயத்தினர் இப்பொழுது வெளியிட்டிருக்கின்றனர்.

நாளாவட்டத்தில், இச்சொற்கள் நடைமுறை உபயோகத்துக்குவந்து இந்தியிலும், இதர இந்தியமொழிகளிலும் விஞ்ஞான, தொழில் நுட்ப பாடங்களில் தகுந்த புத்தகங்கள் தயாரிப்பதற்குப் பயன்படும் என்று நம்பப்படுகிறதாம்!

மண்ணெண்ணெய் விலை குறைகிறது

எண்ணெய்க் கம்பெனிகள், இந்திய சர்க்காரைக் கலந்துகொண்டு அதன் ஒப்புதலின் பேரில் பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலையைக் குறைத்துள்ளனவாம்

பெட்ரோல் விநியோக நிலை அபிவிருத்தி அடைந்திருப்பதே இந்த விலை குறைப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது

பெட்ரோல், அதிகவேக 'டீசல்' எண்ணெய் ஆகியவற்றில் காலன் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

8 காலன் மண்ணெண்ணெய்க்கு $15\frac{1}{2}$ அணு வீதம் விலை குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தப்பிச்சென்ற மாவ் மாவ் தலைவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்?

நைரோபி, ஜூன் 21—

சென்ற ஆண்டு நைரோபியில் தாக்குதல் நடத்தியவர் எனக் கூறப்படும் 'மாவ் மாவ்' இயக்கத் தலைவர் ஜெனரல் 'ஹாரியோகி சோதாரா' என்பவர் கைது செய்யப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த பிப்ரவரியில் அவர் முதன் முறையாகக் கைது செய்யப்பட்டதாயும், ஆனுல் சில வாரங்கள் கழித்து அவர் காவலிலிருந்து தப்பிவிட்டதாகவும் கூறப்பட்டது.

திருமணம்

26—6—55 காலை 9 மணிக்கு, புதுச்சேரி, எண் 95, பெருமாள் கோயில் தெருவில், திரு. சனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்கள் மகன், திரு. கோபதி—திருமதி சாவித்திரி திருமணம், திரு. சி. ஏ. அய்யாமுத்து தலைமையில் நடைபெறும். திரு. ஞா. தேவநேயப்பாவாணர் தலைமையில் வாழ்த்துரையும், திரு. வை. பொன்னம்பலனுர் தலைமையில் விரிவுரையும், திருவாளர்கள் தியாகராசனுர், பெரியண்ணன், வீராசாமி எம். பி., மற்றும் பலர் சொற்பொழிவும் நடைபெறும்.

நெய்வேலி திட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையை நிர்மாணிக்க முடியாது போகுமானுல், அதே தொழிற்சாலையை விஜயவாடாவில் துவங்க வேண்டும் என்று, குழு ஒரு மாற்றமும் கூறி இருக்கிறது.

பம்பாய் மாநிலத்தில் இருக்கும் திராம்பி பகுதியில் ஒன்றும், மத்திய பிரதேசத்தில் உள்ள இடார்சி பகுதியில் ஒன்றும் ஆக இரண்டு உரத் தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கான கருத்தையும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

செயற்கை உரத் தொழிற்சாலைகளின் செயல் துறையை ஒழுங்கு பெற செயல்படுத்துவதற்காக, யோசனையும் குழுவால் தரப்பட்டிருக்கிறது. அதாவது, அரசாங்கத்திற்குச் சொந்தமான புதிய, பழைய உரத் தொழிற்சாலைகளின் உற்பத்தியை வரையறுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் பொது செயற்கை உர உற்பத்திக் குழுவை உருவாக்க வேண்டும் என்பதே அந்த யோசனையாகும்.

தொழில் நுணுக்க பயிற்சி பெற்றுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் அடங்கிய நிரந்தரக் குழு ஒன்று ஏற்படுத்தவும் குழு கோரி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.